Registered as a News paper in Ceylon

# ஈழநாடு

வாரமலர்

மலர் 14 | ஜ. ஆகிர் 25 | ஆடி 22 | ஞாயிற்றுக்கிழமை | (6—8—72) | இதழ் 177

JAFFNA COLLEGE
7 AUG 1972
UNION ... LIBRARY

டொலர் [illegible]
அலுமினியப் பாத்திரங்கள்



டொலர் கோர்ப்பரேஷன
[illegible] கொழும்பு

# வவுனியாவுக்கருகில் பயங்கரக் கொலை; கொள்ளை

## துப்பாக்கிச் சூட்டுக்கு வீட்டுக்காரர் பலி

### யாழ் பொலிசார் விரைகின்றனர்

(நமது நிருபர்)

ஆயுதந்தரித்த கொள்ளைகோஷ்டி ஒன்று ஒரு வீட்டினுள் புகுந்து ஐயாயிரம் ரூபாய் ரொக்கத்தையும் மற்றும் நகைகள் துணிமணிகளையும் கொள்ளையடித்துச் சென்றதுடன் மற்றொரு வீட்டுக்குள் நுழைந்தபோது அவர் எதிர்ப்புக்காட்டவே அவரைச் சுட்டுக் கொன்றுவிட்டு காட்டுக்குள் ஓடிமறைந்து விட்டது.

நேற்று முன்தினம் இரவு ஆசிக்குளத்தில் நடைபெற்ற இச்சம்பவத்தைத் தொடர்ந்து இக்கொள்ளைக்கோஷ்டியைக் கண்டு பிடிப்பதற்கு யாழ்ப்பாணத்திலிருந்தும் பொலிஸ் கோஷ்டியொன்று வவுனியாவை நோக்கிப்புறப் பட்டது.

வவுனியாவுக்கு அப்பால் மதவாச்சி வீதியில் ஆசிக்குளம் என்ற பகுதியில் வசிக்கும் சிதம்பரப்பிள்ளை என்ற வர்த்தகரின் வீட்டில் சுமார் இருபத்தைந்து பேர் கொண்ட ஆயுதந் தரித்த கொள்ளைக் கோஷ்டி ஒன்று நேற்று முன்தினம் இரவு நுழைந்து துப்பாக்கி முனையில் ஐயாயிரம்ருபாய்ரொக்கப்பணத்தையும் மற்றும் நகைகள் துணிமணிகள் ஆகியவற்றையும் கொள்ளையடித்துச் சென்றது.

இத்துடன் சிதம்பரப்பிள்ளையின் மகனைத் துப்பாக்கி முனையில் வெளியே கொண்டுசென்று பொன்னையாவின் விட்டைக் காட்டும்படி அக்கோஷ்டியினர் நிர்ப்பந்தித்தனராம். அவர்களின் பயமுறுத்தலுக்குப் பணிந்த சிதம்பரப்பிள்ளையின் மகன் பொன்னையா என்பவரின் வீட்டுக்கு அவர்களைக் கூட்டிச்சென்றபோது ஆயுதந் தரித்த இக்கோஷ்டியினர் வீட்டுக்குள் நுழைந்ததும் "கிட்ட வந்தால் தொலைத்துப் போடுவேன்" என்று பொன்னையா எச்சரித்தாராம். இந்த எச்சரிக்கையைக் கேட்டதும் அந்தக் கோஷ்டியைச் சேர்ந்த ஒருவர் பொன்னையா மீது குறிவைத்துச் சுட்டாராம். பொன்னையா கீழே விழுந்து மாண்டதும் கொள்ளைக் கோஷ்டியினர் அங்கிருந்து வெளியேறி காட்டுக்குள் ஓடி மறைந்து விட்டனர்.

வவுனியாவுக்கு அப்பால் காட்டுக்குள் ஒழிந்துகொண்டிருக்கும் இக்கொள்ளைக் கோஷ்டியைக் கண்டுபிடிப்பதில் பொலிசார் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். அநுராதபுரத்திலுள்ள இராணுவத்தினரும் இதில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர்.

## நாகராசா கூறவில்லையாம்

(நமது நிருபர்)

'நானும்விடுவதாகவோசித்திருக்கிறேன்' என்று யாழ் மாநகரசபை உறுப்பினர் திரு சி நாகராசா மாநகர சபைக்கூட்டத்தில் கூறியதாக 5-8-72 ஈழநாடு பத்திரிகையில் வெளிவந்தசெய்தி தவறென்றும் அப்படித் தான் கூறவில்லை என்றும் திரு சி நாகராசா தெரிவித்துள்ளார்.

## உற்சவம்

வண்ணை- சிவன் கோவில் தேவி உற்சவம் 5-ம் நாளாகிய இன்று மாலை 6—7-30 மணிக்கு மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி ஆசிரியை செல்வி ராஜசேகரத்தின் 'ஸ்ரீவள்ளி திருமணம்' என்னும் பொருள்பற்றிய கதாப்பிரசங்கமும் தொடர்ந்து அபிஷேக பூஜையாகி இடபவாகனக் காட்சியுடன் சப்பரத்தில் திருவீதி உலாவும் நடைபெறும்.

## அன்னவடிவத் தாழி வரணியில் கண்டுபிடிப்பு

[உடுப்பிட்டி நிருபர்]

மனித எலும்புகளும் சாம்பல் குவியல்களும் கொண்ட அன்னவடிவிலான புராதன 'தாழி' பொன்று வரணியில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

வரணியில் உரச்சேமிப்புக் களஞ்சியம் நிறுவுவதற்காகத் தொழிலாளர்கள் அத்திவாரம் வெட்டும்போது சுமார் ஏழு அடி ஆழத்தில் இத் 'தாழி' அகப்பட்டதாம்.

தொழிலாளர்களின் அக்கறையீனத்தால் புராதனப் பெருமைவாய்ந்த இத்தாழி சேதப்படுத்தப் பட்டுவிட்டதாம். ஆனால் நிலமட்டத்திலிருந்து 8 அடி ஆழத்தில் சாம்பல்குவியல்கள் காணப் படுகின்றன.

உடைந்த தாழிக்குள் இருந்த மனிதஎலும்புகள் சுமார் 500 ஆண்டுகளுக்கு முற்பட்டவையெனக் கருதப்படுகிறது.

## இத்தாலித்துறைமுகத்தில் பெருந் தீ!

ரோம், ஆக. 5

இத்தாலித் துறைமுகம் எரிந்து கொண்டிருக்கிறது. துறைமுகத்திலுள்ள எண்ணெய்த் தாங்கிகள் வெடித்து தீபரவத்தொடங்கியது. இப்போது தீ துறைமுகத்தை முற்றுகையிட்டுவிட்டது.

துறைமுகத்திலுள்ள கப்பல்கள் தீ விபத்திலிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காக, துறைமுகத்தைவிட்டுவெளியேறிக் கொண்டிருக்கின்றன.

தீயணைக்கும் வேலைகள் பலமணிநேரத்தில் மேற்கொள்ளப் பட்டபோதிலும் இரண்டுநாளாவது தீ ஆக்கிரமித்துச் செலுத்துமென்று தெரிவிக்கப்படுகிறது.

## வாலஸைச் சுட்டவருக்கு கடுங்காவல்

நியூயோர்க் ஆகஸ்ட் 5

அலபாமா கவர்னர் திரு வாலஸை சுட்டுக் கொல்ல முயன்ற பிரேமருக்கு அமெரிக்க நீதிமன்றம் 63 வருட கடுங்காவல் தண்டனை விதித்துள்ளது.

ஜனநாயகக்கட்சிசார்பில் அமெரிக்க அதிபர் தேர்தலில் போட்டியிடுவதற்காக நடைபெற்ற முதல் சுற்றுத் தேர்தலின்போது கடந்த மே மாதம் 15ந் திகதியன்று திரு வாலஸ் சுடப்பட்டார். இதில் வேறு மூவரும் காயமடைந்தனர். இந்தப் பாக்கிச்சூட்டினால் வாலஸின் இரு கால்களும் பாரிசவாதத்தால் பாதிக்கப்பட்டு அவர் நடக்க முடியாத நிலையில் இருப்பது தெரிந்ததே.

## கடத்தல் பொருட்கள் நடுக்கடலில் அகப்பட்டன!

(நமது நிருபர்)

வல்வெட்டித்துறையிலிருந்து இந்தியாவுக்கு கடத்தப்படவிருந்த பொருட்கள் நடுக்கடலில் வைத்து தேற்றுக் கைப்பற்றப்பட்டன.

பல ஆயிரம் ரூபாய்கள் பெறுமதி வாய்ந்த பெருந்தொகையான பொருட்களை படகொன்றில் ஏற்றிக் கொண்டு சேர்ந்த ... கடற்படையினரிடம் வகையாக மாட்டிக் கொண்டனர்.

கடத்தப்படவிருந்த பொருட்களும் படகுகளும் கைப்பற்றப் பட்டன. சுங்கப்பகுதி விசாரணை நடத்தியது. படகும் பொருட்களும் பறிமுதல் செய்யப் பட்டதுடன், 11 பேருக்கு அபராதமும் விதிக்கப்பட்டது.

## கொழும்பு மாநகரசபை கலைக்கப்படமாட்டாது

[நமது நிருபர்]

கொழும்பு மாநகரசபை கலைக்கப்படமாட்டாதெனத் தெரியவருகிறது. மாநகர சபையினால் கொடுக்கப் பட்ட விளக்கத்தை உள்ளூராட்சி அமைச்சு ஏற்றுக் கொண்டுள்ளது.

மாநகராட்சியில் பல சீர்கேடுகள் காணப்படுவதாகவும் ஆதலால் ஏன் மாநகரசபையைக் கலைக்கக்கூடாதெனவும் காரணம் காட்டுமாறு மாநகர சபையை உள்ளூராட்சி ஆணையாளர் கேட்டிருந்தார். இதற்கான விளக்கத்தை மாநகரசபை மேயர் முன்பு சமர்ப்பித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

மேயரின் விளக்கத்தை அமைச்சு ஏற்றுக்கொண்டதனால் மாநகரசபை கலைக்கப்படமாட்டாது எனத் தெரியவருகிறது. [வீ. பி. ஏ]

## விடுதலை செய்ய சங்கம் கோரிக்கை

[நமது நிருபர்]

அகில இலங்கைத் தபால் தந்தி ஊழியர் சங்க யாழ்ப்பாணக் கிளைத்தலைவர் திருவி ஆறுமுகம் பொலிசாரால் எவ்வித காரணமுமின்றிக் கைதுசெய்யப்பட்டிருப்பதாகவும், அவரை விடுதலைசெய்வதற்கு உடன் நடவடிக்கை எடுக்குமாறும் கோரி சங்கச் செயலாளர் தபால் தந்தி மந்திரியைக் கேட்டுள்ளார்.

நீர்வேலியில் கைக்குண்டு தயாரிப்பு முயற்சி சம்பந்தமாக நடைபெறும் விசாரணையில் ஆறுமுகமும் விசாரணை செய்யப்படுவதாக பொலிசார் தெரிவித்தனர்.

# ...ட்டது?

[illegible]

## ...த்துத்தம்பி எம். ஏ.

[illegible]

(1) ஏகாதிபத்தியமென் பதை வெறுக்கும் குடியேற்ற நாட்டு மக்கள் ஆங்கிலேயர் கள் ஆக்கிக்கொடுத்த யாப் பைமுற்றாகப் புறக்கணித்து, மண்ணோடு பிறக்கும் நெறி யைத் தழுவி இலங்கைக்கு உகந்த யாப்பை இலங்கை மக்களே ஆக்கவேண்டுமென் னும் விருப்பம்.

(2) ஐக்கிய முன்னணியி னர் உத்தேசித்த அடிப்படை மாற்றங்களை நிலவும் சட்ட அமைப்பிற்குள் நின்று செய் வதினால் ஏற்படக்கூடிய சட் டப்பிரச்சினைகள் உதாரண மாக:- (i) இலங்கை விரும் பிக்கேட்டால் ஐக்கிய இராச் சிய பாராளுமன்றம் இலங் கைக்குப் பொருத்தமான சட் டத்தை ஆக்கும்ஏற்பாட்டை இலங்கைப் பாராளுமன்றம் 2/3 பெரும்பான்மையினாலும் அகற்றமுடியுமா என்ற ஐயப்பாடு.

(ii) 1946 கழகத்துப் பணி [illegible]

[illegible]

### எதிர்ப்பவர் கூற்று

[illegible]

(10-ம் பக்கம் பார்க்க)

[illegible]

## கதை...

# வரப்புயர...

வரப்புயர, நீர் உயரும். நீர் உயர, பயிர் உயரும். பயிர் உயர, குடி உயரும். குடி உயர, கோன் உயர்வான்.

கிட்டத்தட்ட மத்து வரு டங்களுக்கு முன்பு, 4-8-190[illegible]இல் வெளிவந்த "ஈழநாடு" வாரமலரில் இதே 'வரப்புயர-குடியுயரும்' என்ற தலைப்பில் எழுதப் பட்ட ஒரு கட்டுரையில், யாழ்ப்பாணக் குடாநாட்டின் முற்காலத்தவர்கள் கட்டி வைத்த குளம், கேணி, ஏரி, கிணறு முதலியன தூர்ந்து அழிந்துபோகாமல் காப்பாற் றப்பட வேண்டுமென்று வற் புறுத்தப்பட்டது.

மூன்று வாரங்களுக்கு முன்பு 'பொன் முட்டையிடும் வாத் தைக் கொல்வதா?' என்ற தலைப்பில், குளம் முதலிய நீர் நிலைகளை வண்டல் அகற்றி பாதாள நீர் மட் டத்தை உயர்த்தவேண்டிய தன் அவசியம் வற்புறுத்தப் பட்டது.

மழைதான்பெய்கிறது இந்த அற்ப மழையைத் தன்னும் சிக்கனத்தோடு உபயோகப் படுத்துவதில்தான் யாழ்ப் பாணத்தின் பொருளாதார மும் விவசாயமும் தங்கியிருக் கிறது. மழைகாலத்தில் பெய் யும் நீரை நிலமட்டத்துக்குக் கீழேயுள்ள முருகைக் கற் பாறை தேக்கி வைத்திருக்கி றது. பங்குனி முதல் ஆடி, ஆவணிவரை நீடிக்கும் வெய் யில் காலத்தில், தேக்கிக் கிடக்கும் மழை நீரையே பாசனத்துக்கு உபயோகிக் கிறோம். குளம் கேணி, கிணறு முதலியவற்றிலிருந்து இந்த நீரைப்பெறுகிறோம்.

எந்தப் பொருளாயிருந் தாலும் எடுக்க எடுக்க வற் றிப்போகும்தானே? மழைக்கு கிடைக்கும் அற்பவீழ்ச்சி யில், கடலுக்குள் வீழ்ந்தவை யும் ஆவியாகப் போனவை யும் விட, நிலத்திற் செறிந்து தேங்கி நிற்கும் சொற்ப நீரும் [illegible] போகக் கூடிய காலம் ஒன்று உரு

ணீர்ப்பம்புகளே வேலைசெய் கின்றன. இவை நேரத்தை யும் செலவையும் குறைக் கின்றன என்பது உண்மை தான். ஆனால் அதேசமயம் நிலத்தின் கீழ் தங்கியிருக்கும் மழைநீரைப்போன்ற நந்நீரை [illegible] வெளிக் கடல்நீர் [illegible] வந்து கலந்து கொள்வதற்கு வாய்ப்புண்டாகிறது.

பட்டை இறைப்பால் ஓர் ஏக்கருக்கு இறைக்க நாலு பேர் எட்டு மணித்தியாலத் துக்கு வேலை செய்ய வேண் டும். தண்ணீர்ப் பம்பின் உதவியால் இந்த வேலையை ஒரே ஒருவர் மூன்று மணித்தி யாலத்தில் செய்து முடிக்க லாம்.

இரண்டு அங்குல தண்ணீர் பம்பு ஒன்று ஒருமணிநேரத் தில் ஐயாயிரம் கலன் தண் ணீர் இழுக்கும். யாழ்ப்பா ணக் குடாநாட்டில் சுமார் பத்தாயிரம் ஏக்கர்தோட்டக் காணி இருக்கிறதென்று வைத்துக் கொண்டால், ஓர் ஏக்கருக்கு பதினைந்

# ...குடியுயரும்

இன்று மறுபடியும் அதே விஷயத்தை எடுத்துச் சொல்ல நேர்ந்தமைக்கு காரணம் - நிலமட்டத்துக் கீழேயுள்ள பாதாளநீர் வற்றி வெகுவிரைவில் முறிந்து போய்விடும் என்ற அச்சத் தினால்தான்.

சர்ரான், பூரினி, ரைவினி [illegible] முதலியனபயிரிடும் தோட்டக்காரர் நாள்தோ றும் தேவைக்கும் அதிக மான நீரை இறைத்து இறைத் து, பொன்முட்டையிடும் வாத்தை இறகு இறகாகப் பிடுங்கிக் கொல்லுகிறார்கள்.

நல்லூரில் 1910-ம் ஆண் டளவில் இடி விழுந்த ஒரு பெரிய கிணறு காணப்படு கின்றது. பல நூறு மணிக்கணக்காக தண்ணீர் இறைத்தும் இதன் அடியைக் காணவில்லை. இப்பொழுது [illegible]

வாகிவருகிறது. கிணறுகளில் ஊறும் நீர் கடல் நீருடன் கலந்து உவர்த்தன்மை பெறக்கூடிய ஆபத்தும் நெருங்கிவருகிறது. மிகவும் சங்கடமான இந்த நிலையை ஏற்படுத்தியுள்ளது-தண் ணீர்ப் பம்பு என்னும் யந்தி ரம்.

துலைப்போக்கு தண்ணீர் இறைத்த நாட்களில் விவ சாயிகள் தண்ணீரை அள வோடு உபயோகித்தார்கள். வெய்யில் ஏறுவதற்குமுன் இறைப்பு முடிந்துவிடும். இப்பொழுது அப்படியல்ல. அதிகாலையில் தண்ணீர்ப் பம்பை பூட்டிவிட்டால் அது நாள்முழுதும் ஓடிக்கொண் டிருக்கிறது. இந்தக்கோடை காலத்தில் மத்தியானநேரம் கூடி இறைக்கப்படும் தண் ணீர் [illegible]

ரம் கலன் என்ற கணக்கின் படி ஒருமணி நேரத்தில் பதி னைந்து கோடி கலன் நல்ல தண்ணீர் இழுக்கெடுக்கப் படுகிறது!

நிலத்தின்கீழ் தங்கியிருக் கும் நீர் இந்தச் செலவைத் தாக்காட்டிக்கொள்ளுமா?


வெகுசீக்கிரத்தில் இந்த நீர் வற்றிப்போய் கடலி லுள்ள உப்பு நீர் கசியத் தொடங்கும். உப்புநீர்பயிர் களுக்கு நல்லதா?

இதற்காகத்தான் இஸ்ரேல் தேசத்தில் காலையிலே மணிக்குப் பிறகும் மாலை நாலுமணிக்கு முன்பும் தண் ணீர் இறைக்கப்படக்கூடா தென்று அரசாங்கம் சட்டம் விதித்திருக்கிறது.

எமது தோட்டக்காரருக்கு [illegible]

(10-ம் பக்கம் பார்க்க)

— வழிப்போக்கன்



பரிசுநாவல்

# போராடப் பிறந்தவர்கள்





—செங்கை ஆழியான்—

## இரண்டாம் பாகம்

[11]

மீண்டும் ஒரு ஞாயிற்றுக்கிழமை! — தரகர் கந்தையா ஐயாத்துரையின் வீட்டிற்கு வருகிறார். சின்னத்தம்பி கலியாணத்தை குழப்பியதன் பின், இன்றுதான் அவர் வருகிறார்.

அவர் வந்தவேளை வீட்டில் சண்முகநாதனும் கணபதிப்பிள்ளை மாஸ்ரரும் இருக்கிறார்கள். தரகரின் வரவை அவர்கள் முற்றிலும் எதிர்பார்க்கவில்லை.

"வாரும், கந்தையா..." என்று வரவேற்கிறார், மாஸ்ரர்! "முதல் முறை ஒரு கலியாணம் பேசி வந்தீர்... ஐயாத்துரை முடிந்தார்...! இப்ப......?"

"மாஸ்ரர், நீங்க இப்படிச் சொல்லக்கூடாது..." என்கிறார், தரகர். "என்னுடைய கடமையை நான் செய்தேன். விதி என்று ஒன்று இருக்கிறதே..."

"விதியின் மீது பழியைப் போட்டுவிடுவது மிக இலகுவான வழி. விதி என்று ஒதுக்கிவிட்டால் நிம்மதியும் கூட..."

தரகர் சிரித்தபடி வாங்கில் அமர்கிறார்.

"நான் என் சீவியத்திலே முற்றுக்கிய கலியாணங்களில், இந்தக் கலியாணம் ஒன்றுதான் குழம்பினது...! அதை நினைக்க நினைக்க எனக்கு மிகுந்த கவலை. அதனுலை நான் ஐயாத்துரையர் செத்துப்போனார் என்று மற்றவை கூறுகிறதைக் கேட்க எனக்குத் துக்கமாக இருக்கு...! எப்படியாவது ஐயாத்துரையற்றை மோனுக்கு நல்லதொரு இடத்திலே கலியாணம் செய்து வைத்து விடுகிறது என்ற திடசங்கற்பத்தோடுதான் நான் போனன்... அதை நிறைவேற்றத்தான் இங்கை வந்திருக்கிறன்..." என்கிற தரகரைச் சண்முகநாதன் கனைத்தோடு பார்க்கிறான்:

"சொத்தியமாகச் சொல்லுறன். தம்பி, இதிலே நீ ஒரு சதமும் எனக்குத் தரத் தேவையில்லை... சின்னத்தம்பியிலும் பார்க்க நூறுமடங்கு சோக்கான மாப்பிள்ளையை முற்றுக்கிக்கொண்டு வந்திருக்கிறன். நீங்கள் ஓம் என்றுல் சரி... நாளைக்கே பொம்பிளை பார்த்து, விரைவிலே கலியாணத்தையும் முடிக்கலாம்..."

"உம்பிடித்தான் முந்தியும் வந்தீர்" என்கிறான் சண்முகநாதன்.

"அப்படி பகிடி தம்பி. இது! சின்னத்தம்பிபோல 'பிசேந்'றை மாத்திறவனல்ல..."

"ஆர் மாப்பிள்ளை? என்ன மாதிரி என்று விபரமாகச் சொல்லுமன்..." என்று குறுக்கிடுகிறார் கணபதிப்பிள்ளை மாஸ்ரர்.

தரகர் கந்தையா விபரிக்கிறார்:

"பொடியன் ஒரு வாத்தி... முப்பத்திரண்டு வயது!... ஐந்நூற்றுக்கு மேலே சம்பளம் எடுக்கிறான்!... தங்கமான ஆள்!..."

"என்ன...?"

"பொடியனுக்கு இரண்டாந்தாரம். முதல் தாரம் ஒருவருசத்துக்கு முன்னுலை தான் செத்துப்போனது! ஆனு, மாப்பிள்ளையைப் பார்த்தா, இருபத்தெட்டு வயதுதான் மதிக்கலாம்..."

"அப்ப உது சரிவராது..." என்கிறான், சண்முகநாதன்.

"நீ பொறு, சண்முகம்" என்று அவனைத் தடுக்கிறார், மாஸ்ரர்! "ஆர் பொடியன்..."

"வேறை ஆர்... சிலக்கொழுந்தற்றை மகன் வேலாயுதம்தான்..."

"எந்தச் சிலக்கொழுந்து..? தல்லவானி வயிரவ கோயிலுக்கு அருகில்...!"

"ஓ... அந்தாள்தான்...!"

"அது பெரிய இடம், மாஸ்ரர்! வேலாயுத மாஸ்ரரை எனக்குத் தெரியும். நல்ல ஆள்..." என்கிறான் சண்முகநாதன்.

கணபதிப்பிள்ளை மாஸ்ர

## இன்று

நீண்டநேரம் யோசனையில் ஆழ்கிறார். அவருடைய முகத்தில் மலர்ச்சி காணப்படுகிறது.

"இரண்டாம் தாரம் என்ருலும் உந்தச் சம்பந்தம் இலேசில் கிடைக்கக் கூடியது அல்ல... பொடியன் வலு ஒழுங்கானவன் ஏன், கந்தையா உது சரிவருமே?"

"சரிவரும், மாஸ்ரர்! சீதனம் என்ற பேச்சேயில்லை... நீங்க நகைபோட்டுக் கொடுக்கிறதைக் கொடுத்தால் சரி... பொடியன் பொம்பிளையைப் பார்க்கத் தேவையில்லை. தேப்பன் பார்த்துச் சரியென்ருல் தான் சரி என்றிட்டான்! ஓமென்ருல் சொல்லுங்கோ நான் நாளைக்கே கூட்டி வாறன்..." என்கிறார் தரகர்.

சண்முகநாதன் கணபதிப்பிள்ளை மாஸ்ரரைப் பார்க்கிறான்.

"உன் அம்மாவைக் கூப்பிட்டு ஒருக்காக் கேள்..." என்கிறார் மாஸ்ரர்.

"நான் எல்லாம் கேட்டுக்கொண்டுதான் இருக்கிறன். ஓமெண்டுங்கோ..." என்று உள்ளே இருந்த பாக்கியம் குரல் கொடுக்கிறாள்.

இதோ பார் கந்தையா உனக்கு உண்மையைச் சொன்னுல் என்ன? இந்தக் காணி ஐயாயிரத்திற்கு ஈடு... இதை வித்துத்தான் ஈட்டை மீண்டு, மிகுதியை மகேசுக்குச் சீதனமாகக் கொடுத்துக் கலியாணம் செய்கிறது என்று இருக்கிறம்...! தேப்பனில்லாத பிள்ளையள்! இந்தக் காணியை ஈடுகொடுத்ததை அவையள் சீதனமாக ஏற்கிறதென்ருல் அப்படியே தாறம். ஆனு அவை நகை போடவேணும்... இல்லைபோல வித்துப்போட்டு, நகை போட்டு மிகுதியைச் சீதனமாகத் தாறம்..." என்று கூறிவிட்டுத் தரகரைப் பார்க்கிறார் மாஸ்ரர்.

"இனி அதையெல்லாம் நான் பார்த்துக்கொள்ளுகிறன் இன்றைக்குப் பின்னேரம் முற்றுப்படுத்திவாறன்..." என்று தரகர் விடைபெறுகிறார்.

"மகேசுக்கு நல்ல தலையெழுத்துப்போல இருக்குது" என்கிறார், மாஸ்ரர்.

"நானும் வேலை ஏற்றுக் கொழும்பிற்குப்போக இன்னும் பதினைந்து நாள்தான் இருக்கு அதுக்குள்ளை அக்காவிற்குக் கலியாணமானுல் நிம்மதியாகப் போவன்..."

"அப்பு செத்து ஒரு வருஷம் ஆகவில்லை, அதுக்குள்ளை கலியாணம் என்று..."

"உந்தச் சாத்திரங்களை நீங்களும் நம்பிறியளோ...?" என்று கேட்கிறான், சண்முகநாதன்.

மாலை மறைந்து இருள் பரவத் தொடங்கிய வேளையில் தரகர் கந்தையா நல்ல செய்தியோடு திரும்பி வருகிறார். ஆவலாகக் கணபதிப்பிள்ளை மாஸ்ரரும் சண்முகநாதனும் ஆவலோடு காத்திருக்கிறார்கள்.

"போனகாரியம்..."

"வெற்றிதான், மாஸ்ரர்! ஈடுகொடுத்த காணியை ஏற்க அவர்களுக்குச் சம்மதம்... நாளைக்கு இங்கை தேப்பன் வருகிறார்..."

"திருமணம் என்பது சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகிறது' என்பதில் கணபதிப்பிள்ளை மாஸ்ரருக்கு நம்பிக்கை இருந்ததில்லை. இப்போது நம்பிக்கை வருகிறது. சின்னத்தம்பியின் மனைவியாக இருக்கவேண்டிய மகேஸ்வரி, வசதி படைத்த ஒருவரின் மனைவியாகப் போகிறாள். இதனை எப்படிக் கூறுவது? விதிதான் இவற்றை எல்லாம் செய்கிறதா?

நமது அறிவுக்கும் அப்பாற்பட்ட ஏதோ ஒரு சக்திதான் எல்லாவற்றையும் இயக்குவதாக அவருக்குப்படுகிறது.

சண்முகநாதன் நிம்மதியாகச் சிரிக்கின்றான் அந்தச் சிரிப்பில் மாஸ்ரரும் கலந்து கொள்கிறார்.

ஆனல் மகேஸ்வரியின இதயத்தில் மீண்டும் குமுறல் தலைதூக்குகிறது.

(வளரும்)

## புதிய யாப்பு எப்படி...

[7ம் பக்கத் தொடர்ச்சி]

பற்றியுள்ளார்கள்; தமிழரசுக்கட்சி சபையைப் பகிஷ்கரித்தாலும் அக்கருத்தைத் தங்கள் தரப்பினால் சபை ஆவணங்கள் தொடர்ந்து அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன! யாப்பு மாற்றங்களைக் குடியொப்பத்திற்கு விடுவது இலங்கையின் வழக்கமல்ல; 20 ஆண்டுகளின் சாதனையாகவும் 16 ஆண்டுகளின் மாற்றம் சாதனையாகவும் இறுதியில் வாக்களித்த யாப்பு மக்களால் ஆக்கப்பட்டதென்று கூறுவதில் தவறில்லையென்று அரசாங்க ஆதரவாளர்கள் கூறுவர்.

இந்த வாக்குவாதங்களிற்கிடையே புதிய யாப்பு அரசியல் ரீதியான ஒரு மெய்நிலையாகிறது. ஒரு சர்வாதிகாரிகூடத் தன்னுடைய பலத்துடன் தான் விரும்பிய யாப்பை மக்கள்மீது திணிக்க முடியும். எந்த ஒரு வெற்றிகரமான புரட்சியும் காலக்கிரமத்தில் சட்டரீதியானதாகின்றது. எங்கள் யாப்புச் சட்டத்திற்குப் புறம்பாகச் சுதந்திரக்கட்சி, ல ச ச கட்சி, கொம்யூனிசக் கட்சி ஆகிய மூன்றினுல் மாத்திரம் ஆக்கப்பட்டதென்று கொண்டாலும் மக்கள் நீதிமன்றங்கள், நிர்வாகிகள் அதனை ஏற்றுச் அதனை சரித்துக்கொண்டால் சட்டரீதியான அந்தஸ்தைப் பெற்றுவிடும். ஒருவிருவரைத் தவிர ஏனைய அரசாங்க அலுவலர்கள் யாப்பிற்கு விசுவாசமாய் நடப்பதாகச் சத்தியப்பிரமாணம் செய்துள்ளார்கள் அல்லவா? செய்யாதோர் பதவி துறந்தவர்களாவார்கள் என்று யாப்புவிதி 138 சட்டமாக்கப்படுத்தலை கவனிக்கற்பாலது. நீதிமன்றங்கள் யாப்பைச் சட்டரீதியற்றதென்று தீர்ப்புவழங்குவார்களா என்பது யாப்பு விதிகளின்கீழ் எடுக்கப்படும் நடவடிக்கைகளினுல் பாதிக்கப்படும் குடிமகன் நீதிமன்றத்திற்கு முறையிடும்போது எழும் வருங்காலப் பிரச்னையாகும். புதிய 38ம், 39ம் யாப்பு விதிகளின்படி முறையே ஜனுதிபதி, அரசப்பேரவை ஆகியோரின் நடவடிக்கைகள் நீதிமன்றங்களின் நியாயாதிக்கத்திற்கு அப்பாற்பட்டன என்பதும் கவனிக்கற்பாலது. கடந்த பொதுத் தேர்தலில் எந்த ஒரு கட்சியிலும் பார்க்கக் கூடிய வாக்காளர் ஆதரவைப் பெற்ற ஐ தே கட்சி பல குறைகள் மலிந்த புதிய யாப்பைத் தாங்கள் ஒருபோதும் ஏற்கத்தயாராயில்லை என்று உத்தியோகபூர்வமான அறிக்கை விட்டுள்ளனர். அவர்கள் விரும்பாத விதிகளைக் கூட்டுமுன்னணியினர் கையாண்ட 'புரட்சி' வழியிலா அல்லது யாப்பு வகுக்கும் 2/3 பெரும்பான்மை வாக்குகளினுலா மாற்ற எத்தனிப்பார்கள் என்பதை வருங்காலந்தான் காட்ட முடியும். தமிழர் கூட்டணியும் தாங்கள் விடுத்த ஆறு அம்சக்கோரிக்கைகளுக்கிணங்க யாப்புத் திருத்தும் நடவடிக்கைகளை வரும் செப்டம்பர் 30க்குள் அரசாங்கம் மேற்கொள்ளாவிடின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் சாத்வீகப் போராட்டத்தில் இறங்குவதென்று தீர்மானித்துள்ளது. இதன் விளைவுகளையும் வருங்காலந்தான் காட்டமுடியும். தற்பொழுது புதிய யாப்பு அமுலிலுள்ளது.

ஐ தே கட்சிப் பிரமுகர் ஒருவர் கூறுவதுபோல "பொதுத்தேர்தலில் வென்றேரும் தோற்றேரும் கைகோர்த்து யாப்பை ஆக்கினுல், அப்படிச் செய்யமுடியாதென்று ஒரு சட்டமும் தடைசெய்யவில்லை" அப்படியின்றி அன்பும் அறனும் வேண்டியளவுக்கில்லா யாப்பமைக்குஞ் சேர்க்கையினுல் உதித்த புதிய யாப்பாகிய குழந்தை, பண்பும் பயனுமுடைய ஒற்றுமையான குடும்பத்தை உருவாக்கமுடியுமா என்று ஒரு சாரார் கேட்கின்றனர்! அது ஆட்சியாளர் கற்பனையிலாவது மாதிரிச் சோஷலிச சனநாயகத்தையும், மக்கள் தொகுதிகள் ஒன்றைப் போற்றும் தனித்துவத்தையும் அவர் விரும்பும் அடிப்படை உரிமைகளையும் வளர்க்கவல்லதா?

(தொடரும்)

## வரப்புயர......

[7-ம் பக்கத்தொடர்ச்சி]

கண்டபடி இறைப்பது ஒரு புறமிருக்க குளங்குட்டைகளில் சேற்று வண்டல்கள் மண்டிக்கிடந்து மழைநீர் தேங்க முடியாமல் தடையாக இருக்கின்றன. இந்த வண்டல்களை வருடந்தோறும் அள்ளி சுத்தப்படுத்துவது மிகவும் அவசியம். இந்தக் கருமத்தை யார் செய்து முடிப்பது?

விவசாய விசாலிப்பு என்று ஏதோ எல்லாம் சொல்லிக் கொள்கிருர்களே தவிர விவசாயப்பகுதியினரெவராவது இந்த விஷயங்களை தெரியாதவர்களுக்கு விளக்கிக்கூறுவதை எங்கும் காணவில்லை. பயிர்ச்செய்கைக் குழுக்கள் எங்கே போய்விட்டன? ஜனதா கொமிட்டிகள் எங்கே, ம. தோ. க. சங்கங்கள் எங்கே?

பேராசிரியர் குலரத்தினம் போன்ற நிலவியல் நிபுணர்கள் மனம்போனபடி தண்ணீர் இறைப்பதால் ஏற்படக்கூடிய தீமைகளைப்பற்றி அடிக்கடி எச்சரிக்கை கொடுத்து வந்தபோதிலும் எதிர்காலத்தில் வரப்போகும் பேராபத்தை தடுப்பதற்கு அரசாங்கமோ பொதுமக்களோ எவ்வித நடவடிக்கையும் எடுப்பதாகத் தெரியவில்லை.

யாழ்ப்பாண விவசாயிகளின் பொருளாதாரத்துக்கு ஆதிபாரமாயிருப்பது நிலத்திலிருந்து இறைக்கும் தந்நீர். இது எடுக்க எடுக்க வந்துரும் அட்சய பாத்திரமல்ல.

## தமிழ்பற்றி அறிஞர்கள்

நமது தாய்மொழியாம் தமிழ், உலகின் உயர்தனிச் செம்மொழி. இது உலகில்வேறு எந்த இனத்துக்காவது தாய்மொழியாக இருந்திருந்தால் இத்தனை காலத்திற்குள் அது உலகப் பொது மொழியாகியிருக்கும்.

- அறிஞர் அண்ணு

0 0

நாமும் தமிழர் எனக்கொண்டிங்கு வாழ்வதற்கு ஒரு பொருள் உண்டெனில் 'தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும்வகை செய்தல் வேண்டும்'

- பாரதியார்

0 0

தமிழரின் மேன்மையை இகழ்ந்தவனை என் தாய் தடுத்தாலும் விடேன்.

- பாரதிதாசன்

0 0

நான் இறந்ததும் என்து கல்லறையில் 'இவர் ஒரு தமிழன்' என்று எழுதவும்.

- போப்பு ஐயர்

0 0

தமிழர்கள் நல்லவர்களாக மட்டும் வாழ்ந்தால் போதாது என்றும் வல்லவர்களாகவும் வாழ வேண்டும்.

டாக்டர் மு. வரதராசன்

தொகுத்தவர்
'தமிழார்வலன்'

சாந்தி சுன்னாகம்
தினசரி 6-30, இரவு 9-45
ஞாயிறு 2-30
சிவாஜி - தேவிகா
நடித்த
சாந்தி

MANOHARA
Jaffna
Daily 4-45 7 & 9-45PM
Sat Sundays 10-30 A. M.
THE LOST FLIGHT

வெஸ்லி சினிமா
(மானிப்பாய்)
தினசரி 6-00, 9-30
சனி, ஞாயிறு பி. ப. 2-30
சிவாஜி - பத்மினி
நடித்த
திருவருட்செல்வர்

தினசரி மாலை 4-15
சனி, ஞாயிறு 10-30
THE FLAME AND
THE ARROW
(color

ராணி (யாழ்ப்பாணம்)
சிவாஜி — அஞ்சலிதேவி
நடித்த
காலை 10-30
முதல் தேதி

மாலை 4-15, 7-00 & 9 45
SUMMER OF 42
(Strictly for adults only)

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
★ மது ★ ஜெயபாரதி
நடித்த
ப்ரியா
(மலையாளம்)

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
★ ஜெமினி கணேசன்
★ நாகேஷ் அசோகன்
★ ராஜ்ஸ்ரீ ★ விஜயலலிதா
நடித்த
பத்தாம் பசலி
கதை, வசனம், டைரக்ஷன்:
கே. பாலச்சந்தர்

3வது வாரமாகத் திரையிடப்படுகிறது
லிடோ (யாழ்ப்பாணம்)
தினசரி காலை 10-00 பி. ப. 2-00,
மாலை 6-00 இரவு 9-30
தங்கையின் வாழ்வுக்காகத் தன்னையே பணயம் வைக்கும் உத்தமனின் உணர்ச்சி சித்திரம்.
சிவாஜி ★ சரோஜாதேவி
★ முத்துராமன்
★ லக்ஷ்மி
★ சோ
மனோரமா
அஞ்சலிதேவி
நடித்த
முக்தா பிலிம்ஸ்



அருணோதயம்
டைரக்ஷன்:
வி. சினிவாசன்
இசை:
கே. வி. மகாதேவன்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 10-00, சனி, ஞாயிறு 10-30
★ ஜெமினி ★ சரோஜாதேவி
★ விஜயகுமாரி ★ நாகேஸ்வரராவ்
★ தங்கவேலு நடித்த
கல்யாண பரிசு

# கந்தரோடையில்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

நெறியையும் கல்விக் கூடங்கள் மூலம் பேணவேண்டிய நிலை உருவாயிற்று. இந்த நிலையில் சைவசமய மறுமலர்ச்சி இயக்கம் உதயமாயிற்று. பௌத்தமத மறுமலர்ச்சி இயக்கமும், இதன் சமகால இயக்கம் இஸ்லாமிய மாண்மையும், மராவையும் வெளிவளர்க்கும் இயக்கமும் இக்காலத்தில் உதித்தது.

ஒருநாடு அரசியல் விடுதலை பெறுவதற்குமுன் மொழி கலாசார சமய விடுதலை உணர்வு பெற்றுள்ளதால், அரசியல் விடுதலை பெறமுடியும்.

இக்கோட்பாட்டின் சின்னமாக மொழி கலாசார சமய மறுமலர்ச்சியின் சின்னமாக ஸ்கந்தவரோதயம் எழுந்தது.

இம்மறுமலர்ச்சியின் பிரதிபலிப்பாக எழுந்த இக்கல்லூரி கூடம் ஒரு சமூகக் கல்லூரியாகவும் திகழ்ந்தது. சமய நெறியிலும், தமிழ் நெறியிலும், ஆங்கில அறிவிலும் வாற்றிணைந்த உன்னதமும் ஆசிரியரை வினையிய ஆசிரிய திலகம் சந்தையா உபாத்தியாயர் இக்கல்லூரியை சமூகக் கல்லூரியிலிருந்து மக்கள் கல்லூரியாகவும் அமைத்ததன் காரணமாக யாழ்ப்பாணத்தில் இப்பிரதேசத்தில் சமூகப் புரட்சிக்கும் வித்திட்டார் என்பதையும் நாம் உணரவேண்டும்.

மனிதனை மனிதனாக மதித்து மனித சக்தியை வளம்படுத்தி மனித குலத்தின் விடுதலைக்கு வழிவகுத்த ஒரு கல்லூரியின் கடமையாகும்.

இப்பணியில் இக்கல்லூரி ஆற்றியதொண்டு அளவிடற்பாலது.

உடுவில் கிராமசபைத் தலைவராக பலஆண்டுகள் இருந்த நாகமுத்து அவர்கள் சமூக சீர்திருத்தவாதியாக விளங்கி சமூக உணர்ச்சியினை பரம்பிடித் விருப்பிக்கொண்டு நமது நாட்டு வரலாற்றில் இலவச கல்வித்திட்டம் ஒரு புதுயுகத்தை மலர்வித்தது.

தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன் கந்தையாஉபாத்தியாயர் தனது தாபனத்தை வளர்ப்பதற்காக வெளிநாடு சென்று பணம்திரட்டி கல்லூரியை நடாத்தினார்கள். அப்படியிருந்தும் பொருளாதார காரணத்தினால் கல்விகற்க முடியாதிருந்த நாற்றுக்கணக்கான மாணவர்களுக்கு இலவசக் கல்வியும் அளித்தார்கள்.

வடமாகாணத்தில் உதித்த இந்தக் கல்லூரிகளுள், சாதி என்ற கடுக்கற்ற பாகுபாட்டினை அகற்றி மாணவர் எல்லோருக்கும் கல்வியின் வழி வகுத்ததிலும் இலவசக்கல்வி அளித்ததிலும் இந்தாபனமே முதல்இடம் பெறுகின்றது.

உலக நேதிவளர்க்கும், உலக தாபனமாக விளங்கும் இராமகிருஷ்ண சங்கமும் ஸ்கந்தவரோதயம் உதித்த ஆண்டிலேயே தனது முதல் கல்விக்கூடத்தையும் யாழ்நகரத்தில் நிறுவியது. இக்கல்லூரி இலவசக்கல்வி அளிக்கும் கல்லூரியாகவும் சமூகத்தில் அறநிலைவைக்கப்பட்ட மக்களுக்கென்றே நிறுவப்பட்ட தாபனமும் ஆகிறது.

நாகம்ஸ் சினிமா
கல்லூவை
தினசரி 6-30 இரவு 9-45
சனி ஞாயிறு 2-30
சத்தியவான்
சாவித்திரி

யாழ் தியேட்டர்
(காங்கேசன்துறை)
காலை 10-30, பி. ப. 2-30
FANTOMAS STRIKES BACK

தினசரி 6-30 இரவு 9-30
சிவாஜி - கே. ஆர். விஜயா
சரஸ்வதி சபதம்

REGAL (Jaffna)
Daily 5-15 & 7-15 p m
ADIOS GRINCO
[color]

தினசரி இரவு 9-45
எம். ஜி. ஆர் - ஜமுனா
நடித்த
தாய் மகளுக்கு
கட்டிய தாலி

பவானி சினிமா
[மூளாய்]
தினசரி 6-30 இரவு 10-00
சனி ஞாயிறு 2-30
T. M. சௌந்தரராஜன்-
ஜெமினி சந்திரா
நடித்த
பட்டினத்தார்

நியூ காலிங்கன்
இணுவில்
தினசரி 6-30, 10-00
சனி ஞாயிறு பி. ப. 2-30
ரஞ்சன்
நடித்த
நீலமலைத்திருடன்

அடைவு நகை
ஏலவிற்பனை
நிர்த்திக்கல் வீடா பத்தை வீதி, 10-ம் இலக்கக்கடையில் நகை அடைவு பிடிப்பவராகிய திரு. கா. கனகரத்தினம் அவர்களிடம் 30-7-70 முதல் 1-8-71 திகதிவரை அடைவு வைத்து தவணை முடிந்து மீட்கப்படாத நகைகள் யாவும் 1971-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 25-ம் திகதி காலை 9-00 மணிமுதல் மேற்படிக்கடையில் வைத்து பகிரங்க ஏலத்தில் என்னால் விற்கப்படும்.
N. M. A. C. அப்துல்கனி
உத்தரவு பெற்ற ஏலத்தார்
No. 10, Centre Road,
Colombo-15. 4335

காணி விற்பனைக்கு உண்டு
கைபூமி, சாவகச்சேரி, 14 பரப்புள்ள 'வெளிவைடப் புலம்' என்ற காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: விளம்பரதாரர், 227/4, ஐந்தாம் குறுக்குத்தெரு, புறக்கோட்டை கொழும்பு-11, தொடர்பு கொள்ளவும். 4325



## இசை அரங்கேற்றம்

யாழ்ப்பாணம், சனி
சென்னை மத்திய கர்நாடக இசைக்கல்லூரியின் சங்கீத வித்துவான் பரீட்சையில் செல்வி இரஞ்சனா இராசா முதற்பிரிவில் சித்தியடைந்துள்ளார். இவர் திருநெல்வேலி கேணியடியைச் சேர்ந்த தலைமை ஆசிரியர் திரு செ. இராசா தம்பதிகளின் புத்திரியாவார். வேம்படி மகளிர் கல்லூரியின் பழைய மாணவியான செல்வி இரஞ்சனாவின் இசை அரங்கேற்றம் யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் இம்மாதம் 21ம் திகதி மாலை நடைபெறவிருக்கிறது.

யாழ். நகரில்
70 மி. மீ. றியோ சினிமா
நகரசபை யாழ்ப்பாணம்
பெருந்தொகைப் பணச்செலவில் தயாரிக்கப்பட்ட
2-வது உலகப் போரையும் எமது காலத்தில் இடம்பெறும்
சிறந்த சம்பவங்களையும் உண்மையுடன் கூடிய தத்ரூபமாகச்
சித்தரிக்கும் வர்ணத்திரைப்படக்காட்சியை எமது புதிய
சினிமாத்தியேட்டரின் திறப்புவிழாவன்று எதிர்பாருங்கள்!
'லிபரேஷன்'
70 மில்லி மீற்றர் திரையில் திரையிடப்படவுள்ள
இவ் வர்ணப் படம் உங்களை அதிசயத்தில் ஆழ்த்தும்!

